திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பாலக்கோடு வட்டத்தில் காரிமங்கலம் மற்றும் மாரண்டஅள்ளி ஆகிய நகரங்கள் சுற்றுப்புற கிராமங்களுக்கு 15 கிலோ மீட்டர் தூரத்திற்கும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அங்கே தனியாக கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று 2 ஆண்டுக் காலமாக கேட்கப்பட்டு வந்து, சென்ற ஆண்டு பரிசீலனை செய்து அவைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. எனவே இந்த ஆண்டாவது அவைகளை அமைக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாரண்டஅள்ளியில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில்பங்குத் தொகை செலுத்த, ஒன்றியத்தில் நிதி வசதி இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. பிறகு அங்கு ஒரு ஏக்கர் நிலம் கூட இல்லை என்ற ஒரு விவரம் கூட இங்கே எனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், மாரண்ட அள்ளியில் கால்நடை மருந்தகம் கட்ட, முழுமையான பிரேரணை தர்மபுரி கால்நடை உதவி இயக்குநரிடமிருந்து பெறப் படவில்லை. எனவே, மாரண்ட அள்ளியில் புதியதாக ஒரு கால் நடை மருந்தகம் தொடங்குவதற்கான உத்தேசம் இல்லை.

(முற்பகல் 10-10)

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காரிமங்கலத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே அதை அரசு எடுத்து நடத்தும் என்று அறிவித்து, நிலுவையில் உள்ளது. அதுதான் எடுக்கப்படுமா என்று கேட்டேன். மாரண்ட அள்ளி யில் என்னென்ன வசதிகள் வேண்டுமோ, அவைகளை அரசுக்கு செய்துதர நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் தற்போது நிலுவையில் உள்ள காரிமங்கலத்தின் நிலை என்ன? அந்த மருத்துவமனை இந்த ஆண்டாவது எடுக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்ப, இந்த ஆண்டு அரசு பரிசீலனை செய்யும்.

புக்கத்துரை கிராம கால்நடை மருத்துவமனைக் கட்டிடம்.

230—(*வினா எண். 18010)— திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

1984 மார்ச் 8]

(அ) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் புக்கத்துரை கிராமத்தில் கால்நடை மருத்துமனைக் கட்டிடம் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அக் கட்டிடம் விரைவில் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் புக்கத்துரை கிராம மருத்துவமனைக்கு லிண்டல் (lintel) வரை செங்கற் கட்டிடம் கட்டப்பட்டு, சிமெண்ட் இல்லாத காரணத்தால் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. விரைவில் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-10)

2. தகவல் கோரல்.

மழை, வெள்ளத்தினால் தென் மாவட்டங்கள் பாதிக்கப் பெற்றுள்ளமை.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து கடுமையான மழை பெய்துகொண்டிருப்பதன் காரணமாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் வத்திராயிருப்புக்கு அருகே உள்ள கிராமங்கள் நீரிலே மூழ்கி அங்குள்ள மக்கள் மரங்களின் மீது ஏறி நின்றுகொண்டு உயிரைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இதே மாதிரியாக பல மாவட்டங்களில் போக்குவரத்து கூட துண்டிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். நேற்று கூட இது குறித்து கவன ஈர்ப்பு வந்தபோது, ஒவ்வொரு கேள்வியை கேட்க விட்டீர்கள்.

அங்குள்ள மக்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்கு என்ன செய்வது என்று தெரியாமல், மிக பயங்கரமான நிலைமையில் இருக்கிறார்கள். தவித்துக் கொண்டிருக்கிறார்கள் தொடர்ந்து அங்கே மழை பெய்து கொண்டிருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எல்லாக் கட்சி